BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**கோவிட்-19 தொற்றுக்கு பதிலிறுக்கும் முகமாக பிரகடனம் செய்யப்பட்ட அவசரநிலையை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் முடித்துக்கொள்கிறது**

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 24, 2022) – இன்றைய தினம், கோவிட்-19 தொற்றுக்கு பதிலிறுக்கும் முகமாக அவசர நிலையைப் பிரகடனம் செய்ததில் இருந்து இரண்டு வருடங்களுக்குப் பின்னர், நகர் மன்றத்தின் சார்பாகவும், நகரின் அவசர மேலாண்மைக் குழுவின் பரிந்துரையின் பேரிலும், ப்ராம்ப்ட்டன் நகரின் மீது பிரகடனம் செய்யப்பட்ட அவசர நிலையை மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்கள் முடித்து வைத்தார்.

பீல் பிராந்திய நிர்வாகமும் கூட இன்றைய தினம் தனது பிரகடனம் செய்யப்பட்ட அவசர நிலையை முடித்துக்கொண்டது ; இது, சுகாரத்துறை மருத்துவ அதிகாரி டாக்டர் லாரன்ஸ் லோ (Dr. Lawrence Loh) மற்றும் பிராந்திய அவசர நிலை மேலாண்மை அமைப்புடனான ஆலோசனையின் பேரில் செய்யப்படுகிறது.

நகரின் அவசர நிலை மேலாண்மை திட்டத்திற்கு உடன்படும் வகையில் நகர நிர்வாகம் மார்ச் 24, 2020 அன்று அவசர நிலையைப் பிரகடனம் செய்தது. இந்தப் பிரகடனமானது, கோவிட்-19 தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒன்ட்டாரியோ மாகாணம் மற்றும் பீல் பிராந்திய நிர்வாகத்திற்கு ஆதரவளிக்கும் விதமாக துணைநிற்பதற்கான நடவடிக்கையாக இருந்தது. இந்த அவசரநிலைப் பிரகடனமானது ஒரு நிர்வாக கருவியாகும்; பெருந்தொற்றுக்கு எதிராக சமுதாயத்தினைப் பாதுகாப்பாக வைப்பதில் நகர நிர்வாகம் மிக மென்மையாக இந்த அதிகாரத்தைக் கையாள உதவியது.

படிப்படியாகவும் பாதுகாப்பாகவும் மீண்டும் நகரம் திறக்கப்படுவதால், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில், நிர்வாகம் கவனம் செலுத்துகிறது; மேலும் பெருந்தொற்று பரவல் காலம் முழுவதும் உடல் ரீதியான சமூக விலகல், மற்றும் நல்ல சுகாதாரத்தை கடைப்பிடித்ததன் மூலமும், தடுப்பூசிகள் செலுத்திக்கொண்டு மற்றும் முக கவசங்களை அணிந்து கொண்டு தொற்று பரவாமல் தடுக்கவும் உதவிய குடியிருப்பாளர்களுக்கு நன்றி.

குடியிருப்பாளர்கள் நோய்வாய்ப்பட்ட சமயத்தில் வீட்டிலேயே தங்கியிருந்து, கோவிட்-19க்கு எதிராக தடுப்பூசிகள் மற்றும் பூஸ்டர் ஊசிகள் செலுத்திக் கொள்வதன் மூலம் சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கு தொடர்ந்து முதலிடம் கொடுக்க வேண்டும். கோவிட்-19 தடுப்பூசிகள் பற்றிய சமீபத்திய தகவலுக்கு, மாகாணத்தின் இந்த தடுப்பூசி போர்ட்டலுக்கு வருகை தரவும்: Province's vaccine portal.

கோவிட்-19 தொற்று பரவல் நிலைமை மாறுமேயானால், நகர நிர்வாகமானது பீல் பொது சுகாதார அமைப்பினருடன் சேர்ந்து பணியாற்றி, அவசரநிலைக்கு செவிசாய்ப்பதற்கு உதவியாக மாகாண மற்றும் பிராந்திய பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவார்கள்.

**கோவிட்-19 ஆதரவுக்கான பணிப்படைகள்**

தொற்றுப் பரவல் காலம் முழுவதுமாக, ஊழியர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பைக் பேணுவதற்கும், உள்ளூர் பொருளாதாரம் மற்றும் பல்வேறுவிதமாக பாதிக்கப்பட்ட சமூகங்களை ஆதரிப்பதற்கும் நகரம் அர்ப்பணிப்பு கொண்டிருந்தது. மார்ச் 2020 இல், COVID-19 தொற்றுக்கு எதிரான, பயனுள்ள நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க, மேயரின் கீழாக COVID-19 தொற்றுக்கு எதிரான நான்கு பணிப் படைகளை நகரம் அறிவித்தது: அவை, பொருளாதார ஆதரவுக்கான பணிக்குழு, சமூக ஆதரவுக்கான பணிக்குழு, இளைஞர் ஆதரவுக்கான பணிக்குழு மற்றும் மூத்த குடிமக்களின் ஆதரவுக்கான பணிக்குழு ஆகியனவாகும்.

கடந்த 2 ஆண்டுகளாக, கோவிட்-19 தொற்றுக்கு எதிரான முயற்சிகளுக்கு பணிப்படைகளுடன் சேர்ந்து ஆதரவளித்த அனைவருக்கும் மற்றும் ப்ராம்ப்டன் சமுதாயத்தினருக்கும் நகர நிர்வாகம் தனது உண்மையான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது:

- **பொருளாதார ஆதரவுக்கான பணிப்படையில் இணைந்து தலைமையேற்றவர்கள்;** பால் வின்செண்ட், பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 1 மற்றும் 5; மற்றும் மைக்கேல் பல்லேய்ஸ்ச்சி, பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 2 மற்றும் 6
- **சமூக ஆதரவுக்கான பணிப்படையில் இணைந்து தலைமையேற்றவர்கள்;** ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 1 மற்றும் 5; மற்றும் ஜெஃப் பவ்மன், நகரகவுன்சிலர் வார்டுகள் 3 மற்றும் 4;
- **இளைஞர் ஆதரவுக்கான பணிப்படையில் இணைந்து தலைமையேற்றவர்கள்;** சார்மேய்ன் வில்லியம்ஸ் நகர கவுன்சிலர், வார்டுகள் 7 மற்றும் 8 மற்றும் ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர், வார்டுகள் 9 மற்றும் 10

- **மூத்தகுடிமக்களுக்கான பணிப்படையில் இணைந்து தலைமையேற்றவர்கள்;** பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 7 மற்றும் 8 மற்றும் குர்ப்ரீத் தில்லான், பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 9 மற்றும் 10
- **கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் திட்டத்தலைவர்;** டக் வில்லன்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 2 மற்றும் 6
- **மீண்டும் திறத்தல் மற்றும் மீட்சி பெறுதலுக்கான பணிக்குழு தலைவர்**; மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய  கவுன்சிலர், வார்டுகள் 3 மற்றும் 4

அவசர நிலை முடிவடைவதன் பேரில், நகரம் பணிக்குழுக்களை மாற்றியமைக்கும்; மற்றும் நகர சேவை வழங்கல் அமைப்பின் மூலமாகவும் மற்றும் சமூக சமூக ஆதரவு நெட்வொர்க்குகள் வழியாகவும் சமூகத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும்.

**நடப்பில் இருந்து வரும் கோவிட்-19 தொற்றுப் பரவல் மீதான நடவடிக்கைகள்**

நகரமானது ப்ராம்ப்ட்டன் கோவிட்-19 கட்டாய முக கவசம் அணிதலுக்கான உப சட்டத்தை நீக்கியுள்ள நிலையில், பொதுப் பேருந்து போக்குவரத்து, சுகாதாரப் பாதுகாப்பு அமைப்புகள், நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்கள் மற்றும் கூட்டுக்குழு பராமரிப்பு அமைப்புகள் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளில் முக கவசங்கள் தொடர்ந்து தேவைப்படுகின்றன என்பது குடியிருப்பாளர்களுக்கு நினைவூட்டப்படுகிறது. தேவைப்படாத அமைப்புகளில் இனிமேற்கொண்டு முகவசங்களைத் தொடர்ந்து அணிய விரும்புபவர்களை மதிக்குமாறு குடியிருப்புவாசிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பின் அனைத்து பேருந்துகளிலும், ப்ராம்ப்ட்டன் நகர பேருந்து போக்குவரத்து முனையங்களிலும் மாகாணத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப முக கவசங்கள் அணிவது தொடர்ந்து தேவைப்படும். சுத்தம் செய்தல் மற்றும் சுத்திகரிப்பு செய்தல் நடைமுறையில் உள்ளன; மேலும் கடினமான மேற்பரப்புகளைக் கொண்ட கட்டிடங்கள் மற்றும் பேருந்து முனையங்கள் தினமும் துடைக்கப்பட்டு சுத்தம் செய்யப்படுகின்றன.

சேவை பற்றிய புதிய தகவல்களுக்கு  www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது Twitter இல் @bramptontransit ஐப் பின்தொடரவும். கேள்விகள் இருப்பின்  905.874.2999 இல் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் தொடர்பு மையத்திற்கு அனுப்பி வைக்கப்படலாம்.

நகர நிர்வாகத்தின் கட்டிடங்களுக்குள் செல்ல நோய்கண்டறியும் செயல்முறை இனிமேற்கொண்டு தேவைப்படாது. இருப்பினும் குடியிருப்புவாசிகள் நலமில்லாததாக உணர்ந்தால் வீட்டிலேயே இருந்துவிடுமாறு உற்சாகமளிக்கப்படுகிறார்கள்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டனில் கோவிட்-19 தொற்று பரவலுக்கு செவி சாய்க்கும் வகையில் எங்களின் அவசர நிலையை முடிவுக்கு கொண்டு வரும் நிலையில் இருக்கிறோம் என்பதை அறிவிப்பதில் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். எங்கள் குடியிருப்பாளர்கள், நகர ஊழியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் நகர பணிக்குழு உறுப்பினர்களின் சிறந்த முயற்சிகள் இல்லாவிட்டால் நாம் இன்று இருக்கும் இடத்தில் இருந்திருக்க மாட்டோம். தொற்றுப்பரவலின் இந்த அடுத்த கட்டத்தினுள் நாம் கடக்க இருக்கும்போது, கடந்த இரண்டு ஆண்டுகளாக - ஒரு சமூகமாக - நாம் அதிலிருந்து மீண்டு வருவோம் என்று எனக்குத் தெரியும்.

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கடந்த இரண்டு ஆண்டுகளாக, ப்ராம்ப்ட்டன் நகரத்தில் உள்ள எங்கள் குழுவானது, எங்கள் குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகங்கள் நம்பியிருக்கும் சேவைகளைத் தொடர்ந்து வழங்கும் அதே வேளையில், எங்கள் சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதிலும் உறுதியுடன் ஸ்திரமாக இருந்துவந்தது. ஊழியர்களின் அந்த முயற்சிகளுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக, மற்றும் தொற்று பரவலின் இந்த அடுத்த கட்டத்திற்கு செல்லும்போது நமது சமூகத்திற்கு தொடர்ந்து சேவை செய்ய நாங்கள் எதிர்நோக்குகிறோம் என நகரத்தின் சார்பாக கூறிக்கொள்கிறோம்.

*- பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக்

கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca